| | | | |
|---|---|---|---|
| 08.09.2021 | ஐ,ஏ,3/2019 இன்<br>அசல் வழக்கு எண்.154/2019 | எ.ம.சா.1 | திரு.சாமிநாதன்<br>த/பெ.நஞ்சைய்ய கவுடர் |

சாட்சி மீண்டும் திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

குறுக்கு விசாரணை - (மனுதாரர் தரப்பில்)

என் தந்தை பெயர் நஞ்சைய கவுடர் என்றால் சரிதான் . அவர் அப்பா பெயர் சின்னண்ண கவுடர் என்றால் அது பற்றி தெரியாது . எனக்கு இரண்டு தாத்தா . ஒருவர் பெயர் சின்னசாமி மற்றவர் பெயர் தெரியாது . என் உடன் பிறந்தவர்கள் மூன்று ஆண்கள். என்னுடைய மூத்தவர் பெயர் கருப்புசாமி. என்னுடைய இளையவர் பெயர் கிருஷ்ணசாமி. என் அத்தை பெயர் சுப்பம்மாள் . என்னுடைய தந்தையார் தனிப்பட்ட சுவாதீனத்தில் இருந்தபோது என் அத்தைக்கு ஒரு பூமி எழுதி கொடுத்தார் என்றால் சரிதான். என் தந்தையார் என் அத்தைக்கு 498/பி காலையில் 4.95 விஸ்தீரண பூமியில் 2.44 ஏக்கரா விஸ்தீரணமுள்ள பூமியை எழுதி கொடுத்தார் என்றால் சரிதான். அந்த தான செட்டில்மெண்ட் 1959 ம் ஆண்டு எழுதப்பட்டது என்றால் சரிதான். மேற்படி ஆவணம் ம சா ஆ .6 ஆகும். பழைய க.ச. எண். 724/2. அந்த பூமியின் புது க. ச எண். 498/2 பி என மாறிவிட்டது என்றால் சரிதான் . அந்த பத்திரத்தை என் அப்பா என் அத்தைக்கு எழுதிக் கொடுக்கும்போது வண்டித்தடத்தை மேற்படி காலையில் தென்கோட்டில் கிழமேலாக 5 முழ அகலத்தில் வண்டித்தடம் விடப்பட்டுள்ளது என்று எழுதி கொடுத்திருக்கிறார் என்றால் சரிதான் . எழுதும்போது எவ்வாறு வேண்டுமானாலும் எழுதியிருக்கலாம். அது கால் தடம் தான். அது நம் இருவரின் சொந்த உபயோகத்திற்காக விடப்பட்டுள்ளது என்று பத்திரத்தில் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான் . அந்த இடம் என் தந்தைக்கும் என் அத்தைக்கும் மட்டும் தான் பாத்தியப்பட்டது என்று எழுதப்பட்டுள்ளது. அந்த வண்டித்தடம் உட்பிரிவு செய்யப்பட்டு க.,ச எண். 498/2 சி ஆக மாறி உள்ளது என்றால் சரிதான் . 498/2 சி என்பது வருவாய் துறை ஆவணங்களில் வண்டித்தடம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் , அவ்வாறு குறிப்பிடப்பட்டிருக்கலாம். ஆனால் அது கால் தடம் தான். அந்த வண்டித்தடத்திற்கு தனி சிட்டா ஒதுக்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். அந்த சிட்டாவின் என் பெயர் மற்றும் என் மகன் பெயர் வள்ளியம்மாள், சுபபையன் , ரத்தினம் மற்றும்பத்திரசாமி பெயர் உள்ளது

என்றால் சரிதான். அதனுடைய பட்டா எண். 1595 என்றால் சரிதான். அந்த ஆவணம் ம சா ஆ 7 ஆகும். என் அத்தை சுப்பம்மாளுக்கு என் தந்தை தானமாக கொடுத்த பூமியை 1982 ம் ஆண்டு பத்திரசாமி சுப்பையன் என்பவருக்கு கிரைய த்திற்கு கொடுத்து விட்டார் என்றால், சரிதான். அந்த பத்திரம் 2158/1982 எண் கொண்டதாகும். அது ம சா ஆ 8 ஆகும். அவர் எழுதி கொடுக்கும்போது மேற்படி காலையில் தென்கோட்டில் கிழமேலாக 5 முழ அகலத்தில் வண்டித்தடம் சகிதம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், எழுதியிருக்கலாம். அது கால் தடம். நான் சொன்னது போல் என் அத்தைக்கு கிரையம் கொடுத்த 498/2 பி,498/2 சி ஆகியவை எனக்கு பாத்தியப்பட்ட 498/2 ஏ காலைக்கு கிழபுறமாக உள்ளது என்றால் சரிதான் . 498/2 பி க்கு கிழபுறம் வாதிகளின் கணவர்கள் பத்திரசாமி சுப்பையன் ஆகியோர்கள் என் அத்தை மகன் கருப்புசாமி என்பவரிடமிருந்து கிரையம் வாங்கியிருக்கிறார்கள் என்றால் அது பற்றி தெரியாது . கருப்புசாமி , எனது அத்தை சுப்பம்மாள் அவருடைய சகோதரர் ஆகியோர்கள் பாக பிரிவினை செய்து கொண்டுள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது . வாதிகள் எங்களுக்கு பாத்தியப்பட்ட பூமிக்கு கிழபுறமாக 498/2 பி ல் வீடுகட்டி குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். பத்திரசாமிக்கு பாத்தியப்பட்ட 485/1 பி. 486/2, 498/3, ஆகிய பூமிகள் எனக்கு பாத்தியப்பட்ட 498/2 ஏ காலைக்கு மேபுறமாக உள்ளது என்றால் சரிதான். வாதி இந்த நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யும் போது ஒரு வரைபடம் தாக்கல் செய்துள்ளார்கள் தாவா வரைபடத்தில் உள்ள பூமியின் அமைப்பு சரிதான் . ஆனால் வண்டித்தடம் கிடையாது. வரதராஜன் தாக்கல் செய்த வழக்கு ப ற்றி தெரியும் . அந்த வழக்கு எண். 307/2018 ல் அந்த வழக்கில் நீதிமன்ற ஆணையாளர்தாவா சொத்தை பார்வையிட்டு வரைபடம் போட்ட விபரம் எனகது தெரியாது . அந்த வரைபடத்தில் வண்டித்தடம் கிழபுறம் பள்ளவாரி வரை போகிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது . சின்னசாமி வகையறா வண்டித்தடம் உரிமை கேட்டு இந்த நீதிமன்றத்தில் ஒரு வழக்கு போட்ட விபரம் எனக்கு தெரியும் . அந்த வழக்கில் வரைபடம் தாக்கல் செய்து அதில் வண்டித்தடம் பள்ளவாரி வரை போனதாக வரைபடம் போட்டிருக்கிறார்கள் என்றால் அது பற்றி தெரியாது . வழக்கு தாக்கல் செய்த வரதராஜனும் சின்னசாமியும் வண்டித்தடம் கிழக்கில் பள்ளவாரி வரை போவதாக சொல்லி உள்ளார்கள் என்றாலும் நான் வண்டித்தடம் போகவில்லை என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் , ஒரு தடம்போகிறது. அதற்கு அப்புறம் பள்ளம் தான் போகிறது, மேற்கே தான் லாரி போகும்

தடம் உள்ளது. மேற்கே எந்த எந்த காலைகள் போகிறது என்றால்,காலை எண் தெரியாது. தடம் விட்டிருக்கிறார்கள். அவ்வாறு மேற்கே தடம் இருப்பதாக எந்த ஆவணங்களை யோ அல்லது வருவாய் ஆவணங்களையோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை . 498/2 பி காலையில் விடப்பட்ட விட்டில் இருந்து மேபுறமாக வாதிகளின் பூமியில் விடப்பட்ட வண்டித்தடம் விடப்பட்டுள்ளது என்றால் சரிதான் . அது 498/1 பி காலைக்காக விடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல . அது பொது வண்டித்தடம் என்பதற்காக ஒப்பந்தம் எதாவது போடப்பட்டதா என்றால் போடப்படவில்லை. 498/2 பி காலையில் மேபுறமாக 485/1 பிக்கு செல்ல ஒரே வண்டித்தடம் தான் உள்ளது என்றால் சரிதான். மேபுறமாக செல்லும் வண்டித்தடத்தை தடுப்பதற்கு யாருக்கும் எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரிதான் . 498/2 ஏ காலைக்கு தென்புறமாக செல்கிறது என்றால் சரிதான் . 498/2 ஏ காலைக்கு தென்புறமாக உள்ள வண்டித்தடம் தான் வரைபடத்தில் ஏ, பி, சி, டி என காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான் . எங்கள் பூமிக்கு கிழபுறம் உள்ள வண்டித்தடம் தான் வருவாய் ஆவணங்களில் வண்டித்தடமாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் ,அது கால் தடம் தான் . ஆவணத்தில் எழுதியிருக்கலாம். 498/2 சி காலை என்பது அனுபவத்தின் அடிப்படையில் யூ டி ஆர் படி பட்டா போட்டு கொடுக்கப்பட்டது என்றால் சரிதான் . யூ டி ஆர் திட்டத்தில் சர்வேயர் வந்து அளந்து அனுபவத்தின் அடிப்படையி ல் பட்டா போட்டு கொடுக்கப்பட்டது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது . நானும் என் சகோதரர்களும் 1987 ல பாகப்பிரிவினை செய்து கொண்டோம் என்றால் வருடம் தெரியாது . ஆனால் பாகப்பிரிவினை செய்யப்பட்டது . அந்த ஆவணம் தான் என்னிடம் தற்போது காண்பிக்கப்படுவது ஆகும். 1987 ஆம் வருடம் பத்திர எண் 1351 ம்வருட பத்திரம் என்றால் சரிதான். அந்தபத்திரம் ம சா ஆ 9 ஆகும். அந்த பாக பிரிவினை பத்திரத்தில் எனக்கு 4 ஏக்கராவும் என் மகன் ரஞ்சித் குமாருக்கு 1.46 ஏக்கராவும் ஆக மொத்தம் 5.46 ஏக்கரா பாகப்பிரிவினை செய்து கொண்டோம் என்றால் சரிதான் . அதன் பழைய உட்பிரிவு 724/2, புதிய உட்பிரிவு 498/2 ஏ என்றால் சரிதான். மற்றொரு பிரிவு 754/1 புது எண் 486/1 என்றால் சரிதான். 498/2 ஏ காலையில் மொத்த விஸ்தீரணம் 2.52 என்றால் 2.51 விஸ்தீரணம் ஏக்கரா. 486/1 ல் மொத்த விஸ்தீரணம் 2.95 ஏக்கரா. பாகப் பிரிவினைக்கு முன்பாக என் பெயரிலும் என் மகன் பெயரிலு ம் கூட்டாக பட்டா

சிட்டா இருந்து கூட்டாக அனுபவித்து வந்தோம் என்றால் சரிதான். 498/2 ஏ காலையின் கிழபுறம் ரத்தினம் என்பவருக்கு விற்க முடிவு செய்து அவருக்கு கிழபுறம் உள்ள ஒரு பகுதியை கொடுத்தேன். 1.22 ஏக்கர் விஸ்தீரணம் உள்ள பூமியை கிரயத்திற்கு கொடுத்தேன் என்றால் 1.20 தான் கொடுத்தேன். கிரையம் கொடுக்கும்போது சர்வேய ர் வைத்து அளந்து தான் பூமியை கிரயம் கொடுத்தேன். என் மகன் ரஞ்சித்குமார் எம் பி ஏ , படித்துள்ளார், மகள் ராதா பி .காம் படித்திருக்கிறார்கள் என்றால் சரிதான் . நான் படிக்கவில்லை. ஆனால் ஆங்கிலத்தில் கையெழுத்து போட்டிருக்கிறேன் என்றால் சரிதான். நான் இரண்டாம் , மூன்றாம் வகுப்பு வரை தான் படித்துள்ளேன் . நான் ஆரம்பத்தில் 1.22 கொடுத்தேன் என்றால் 1.20 ஏக்கரா கொடுத்தேன். ஒரு முறை பணம் வாங்கினேன். இரண்டு முறை கிரையம் செய்து கொடுத்தேன் . முதல் முறை நெம்பர் மாறிவிட்டது என்ற இரண்டாவது முறை கிரையம் செய்து கொண்டார்ள் . முழுத் தொகையை ஆரம்பத்திலேயே வாங்கி கொண்டேன் . 2002 ம் ஆண்டு வருடம் ஒரு ஏக்கரா 2 செண்ட் தான் கிரையம் ஆகியிருந்தது என்றால் 1.20 க்கு பணம் வாங்கி விட்டேன். 1.02 க்கு கிரையம் நடந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது . அந்த பத்திரத்தில் ஒவ்வொரு பக்கத்திலும் நான் , என் மகன், மற்றும் மகள் கையெழுத்து போட்டிருக்கிறோம் என்றால்., படித்து பார்க்காமலே கையெழுத்து போட்டோம் . அதில் சாட்சிகள் முன்னிலையில் தான் நாங்கள் கையெழுத்து போட்டோம் . கிரையத்தை பதிவு செய்யும் போது தான் பதிவாளர் பணம் வாங்கி கொண்டு கிரையம் செய்து கொடுக்கிறோமா என்று கேட்டிருப்பார் என்றால் கேட்கவில்லை . அந்த பத்திரத்தை வெள்ளிங்கிரி டைப் ஆபிஸ் மூலம் தான் டைப் அடித்திருக்கிறார்கள் என்றால் எனக்கு படிக்க தெரியாது. பத்திரத்தை நான் படிக்கவில்லை . பணம் வாங்கி கொண்டோம் . வெள்ளிங்கிரி டைப் ஆபிசில் அந்த பத்திரத்தை டைப் அடித்திருக்கிறார்கள் என்றால் எனக்கு தெரியாது . பத்திரத்தை படித்து சொல்ல முடியுமாஎன்றால் எனக்கு படிக்க தெரியாது. அந்த சமயத்தில் பட்டா மாறுதல் மனுவிலும் கையெழுத்துபோட்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த பத்திரத்தின் சொத்து விபரத்தில் 498/2 ஏ காலையின் தென்புற கோட்டில் கிழமேல் பாதையில் 498/2 சி நெ. காலையாக உள்ள கிழமேல் பாதையையும் இந்த கிரைய சொத்திற்கு பொதுவாக போய் வரவும் வண்டி வாகனாதிகள் ஓட்டி போய் வந்து பொதுவாக அனுபவித்து கொள்ளும் பாத்தியம் சகிதம்என்று எழுதி கொடுத்திருக்கிறேன் என்றால் அது கால் தடம் தான். நான் படிக்கவில்லை. அந்த

வண்டித்தடம் கிழமேல் வண்டித்தடம் என்று எழுதி கொடுக்கப்பட்டுள்ளது என்றால் ,அது எப்படி வேண்டுமானாலும் எழுதலாம். அது கால் தடம் தான். 20 செண்ட் பத்திரம் என் 2004 ம் வருடத்தில் ஒரு பத்திரத்தை ரத்தினத்திற்கு கிரையம் செய்து கொடுத்திருக்கிறேன் என்றால் சரிதான். அந்த பத்திரம் மேட்டுப்பாளையம் சார்பதிவாளர் அலுவலகத்தில் 6.1.2004 தேதியில் கிரைய பத்திர எண் 33/2004 என்ற எண்ணாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் , அதை பற்றி எனக்கு தெரியாது . அந்த பத்திரத்தில் 20 செண்ட் விஸ்தீரணம் உள்ள பூமியை எழுதி கொடுத்திருக்கிறேன் என்றால் சரியல்ல ., ஏமாற்றி எழுதி வாங்கி கொண்டார்கள். அந்த பத்திரத்திலும் நான் என் மகன் மற்றும் மகள கையெழுத்து போட்டுள்ளோனம் என்றால் சரிதான். அந்த பத்திரமும் வெள்ளிங்கிரி டைப் ஆபிசில் பதிவு செய்யப்பட்டது என்றால் அது பற்றி தெரியாது . அதிலும் சாட்சிகள் முன்னிலையில் தான் கையெழுத்துபோட்டுள்ளோம் . அந்த பத்திரத்தின் செக்குபந்தியில் கிழமேலாக விடப்பட்டுள்ள பாதைக்கு வடக்கு என்று தான் எழுதி கொடுத்திருக்கிறேன் என்றால் சரிதான். அது கால் தடம். அவ்வாறு ஏமாற்றி எழுதி வாங்கி கொண்டார்கள் என அவர்கள் மீது போலிசில் புகார் கொடுத்தேனா என்றால் , தற்போது தான் தெரிய வந்தத . அதனால் நடவடிக்கை எடுக்கவில்லை . என் மகனும் மகளும் படித்தவர்கள் அவர்கள் நடவடிக்கை எடுத்தார்களா என்றால் இல்லை . கிரைய பத்திரத்தின் அடிப்படையில் பட்டா மாறுதல் செய்து கொண்டார்கள் என்றால் எனக்கு தெரியாது . கிரையம் செய்ததன் அடிப்படையி ல் அவர்கள் சொத்தின் அனுபவித்திற்கு வந்து விட்டார்கள் என்றால் சரிதான். இது நாள் வரையில் கிரைய பத்திரத்தின் அடிப்படையில் தான் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான் . நான் கிரையம் செய்து கொடுத்ததற் கு பின்னிட்டு கிரையம் செய்த பூமியை தவிர மீதி இருக்கும் பூமியை தான் அனுபவித்து வருகிறேன் என்றால் சரிதான். வாதி ரத்தினம் நான் அளந்து கிரையம் செய்து கொடுத்த பூமியை தர்ன இதுநாள் வரையி ல் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். அதே நாளில் 2002 ல் 486/1 காலையில் நான் வள்ளியம்மாளுக்கு ஒரு கிரையம் செய்து கொடுத்திருக்கிறேன் என்றால் சரிதான். அந்த ஆவணம் பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். அந்த கிரைய சொத்து 486/1 காலையின் மொத்த விஸ்தீரணத்தில் ஒரு பகுதியை கிரையம் செய்து கொடுத்தேன் என்றால் சரிதான். அது 80 செண்ட் கிரையம் செய்து கொடுத்தேன், அதை அளந்து தான் கிரையம் செய்து கொடுத்தேன் . அந்த ஆவணம் 15.07.2002 ம் தேதியன்று மேட்டுப்பாளையம் சார்பதிவாளர் அலுவலகத்தில் 3287/2002 என்ற

எண்ணாக பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான் . அந்த ஆவணத்தை சாட்சிகள் முன்னிலையில் தான் கிரையம் செய்யப்பட்டது என்றால் சரிதான் . ஒரு ஆவணம் தயாரிக்கும்போது புரூப் போட்டு படித்து பார்த்து விட்டு தான் கிரையம் செய்வார்கள் என்றால் அப்பொழுது எங்களுக்கு புரூப் கொடுக்கவில்லை . அந்த கிரைய ஆவணம் நடைபெறும்போது பட்டா மாறுதல் மனுவிலும் கையெழுத்து போட்டிருக்கிறேன் என்றால் சரிதான். அந்த பத்திரத்தில் சர்வேயர், சிட்டா ,பட்டா , நில உடைமை புல வரைபடம், அசல் வில்லங்க சான்றிதழ் , அடங்கல் ஒப்படைத்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் படித்து பார்க்கவில்லை . அந்த ஆவணத்தில் எல்லா பக்கத்திலும் என்னுடைய கையெழுத்து போட்டுள்ளேன். அந்த பத்திரத்தில் 498/2 ஏ காலையில் தென்புற கோட்டில் கிழமேலாக விட்டுள்ள பாதையையும் 498/2 சி நெ. காலையாக உள்ள கிழமேல் பாதையையும் இக்கிரைய சொத்திற்கு பொதுவாக போய் வரவும் வண்டி வாகனங்கள் போய் வந்து பொதுவாக அனுபவித்து கொள்ளும் சகிதம் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் நான் படிக்கவில்லை. அந்தபத்திரத்தில் 94 செண்ட் கிரையம் செய்து கொடுத்துள்ளேன் என்றால் 80 செண்ட் என்று சொல்லி தான் கிரைய ம் வாங்கினார்கள் . அந்த பத்திரம் செல்லாது என நீதிமன்றத்தில் நடவடிக்கை எதாவது எடுத்தேனா என்றால் பத்திரத்தை படித்து பார்க்கவில்லை . கிரையத்திற்கு பின்னிட்டு சொத்து அவர்கள் அனுபவத்திற்கு வந்து அவர்கள் அனுபவத்தில் தான் இருந்து வருகிறது என்றால் சரிதான். கிரையம் வாங்கிய தேதியில் இருந்து இது நாள் வரை அவர்கள் தான் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான் . நான் பத்திரத்தில எழுதி கொடுத்து விட்டு தற்போது வழக்கிற்காக அவ்வாறு எழுதி கொடுக்கவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அவர்கள் தான் ஏமாற்றி எழுதி வாங்கி கொணடார்கள். கிரையம் வாங்கிய தேதியில் இருந்து நாளது தேதிவரை அவர்கள் தர்ன சொத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றால் நான் படிக்கவில்லை . அந்த பத்திரத்தில் வண்டித்தடம் போவதற்கு எல்லா உரிமையையும் எழுதி கொடுத்து விட்டு தற்போது வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. கால் தடம் தான் அங்கே இருக்கிறது என்பதை காண்பிப்பதற்கு எந்த புகைப்படம் தாக்கல் செய்யவில்லை. கிழபுறமாக உள்ள வண்டித்தடத்தை இவ்வழக்குகளை தாக்கல் செய்த சின்னசாமி வகையறாவும் வரதராசும் வண்டித்தடம் இருக்கிறது என்று சொல்லி உள்ளார்கள். ஆனால் நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வண்டித்தடம் மேற்காக இருக்கிறது. நான் 2012 ல்

பூமியை விற்ற பிறகு நான் அந்த பக்கம் போகவே இல்லை . தற்போது அந்த பூமியின் அமைப்பு எவ்வாறு உள்ளது என்று தெரியாது . அதில் என்ன விவசாயம் செய்து வருகிறார்கள் என்று தெரியாது. எங்கள் பூமியில் இருந்து கிழபுறமாக சென்றால் அரை கிலோ மீட்டர் தூரத்தில் என் வீடு இருக்கிறது . 200 மீட்டர் கால் தடம். அதன் பிறகு பள்ளம். எங்கள் பூமிக்கு கிழபுறம் செல்வம் என்பவர் இருக்கிறார் என்றால் தெரியாது . என் பூமிக்கு அருகில் உள்ளவர்கள் பள்ளத்தை தாண்டி தான் அவரவர் பூமிக்கு செல்கிறார்கள் என்றால் சரிதான். பள்ளத்தில் வண்டித்தடம் விட்டுள்ளார்களா என்றால் இல்லை. எதாவது ஆவணத்தில் மேற்காக கிழக்காக செல்லும் தடம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறதா என்றால் பொது வாக விட்டுள்ளார்கள். ஆவணம் இல்லை. என் அத்தை பத்திரத்தில் 5 முழ அகலத்தில் கிழக்கே இருந்து மேற்காக செல்லும் தடம் என்று தான் எழுதப்பட்டிருக்கிறது என்றால் , எழுதியிருக்கலாம். புழக்கத்தில் இல்லை. கால் தடம் தான் . என்னுடைய பாக பிரிவினை பத்திரத்தில் வண்டித்தடம் பற்றி எழுதப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை. மேற்காக செல்லும் வண்டித்தடத்தை பற்றி எந்த வித மூல ஆவணத்திலும் இல்லாத நிலையில் நாங்கள் புதிதாக வண்டித்தடம் கேட்கிறோம் என்றால் 50 வருடங்களாக எல்லோரும் அதில் தான் போய்க்கொண்டிருக்கிறோம். மேற்கே செல்லும் வண்டித்தடத்திற்கு ஆவணங்கள் இல்லை. என் தகப்பனார் எங்கள் பூமிக்கு கிழபுறமுள்ள தொப்பப்ப ரங்கைய கவுடர் என்பவரிடமிருந்து வண்டித்தடம் வாங்கியிருக்கிறார் என்றால் அது பற்றி தெரியாது . மேற்கு புறமாக உள்ளதாக நான் சொல்லும் வழியில் சென்றால் எங்கள் வீட்டிற்கு எவ்வாறு செல்லலாம் என்றால் வீட்டிற்கு போவதில்லை. அந்த வழி காரமடை சந்தைக்கு செல்கிறது. எங்கள் பூமியை 2012 ம் ஆண்டு ஒரு நிதிநிறுவனத்தில் அடமானம் வைத்திருந்தேன் என்றால் சரிதான். அப்பொழுது அவர்கள் பவர் வாங்கி கிரைய ம் செய்து விட்டார்கள். அவர்கள் என்னுடைய பாக பிரிவினை பத்திரத்தில் என்ன செக்குபந்தி சொல்லப்பட்டுள்ளதோ அதே போல் தான் அவர்கள் கிரையம் செய்து கொண்டார்கள் என்றால் சரிதான் . யாருக்கு கிரையம் செய்து கொடுத்தார்கள் என்றால் தண்டாயுதபாணிக்கு பவர் கொடுத்து சுப்ரமணிக்கு கிரையம் செய்து கொடுத்தார்கள். அந்த கிரையம் செய்வதற்கு முன்பு நான் தான் அனுபவித்து வந்தேன் . அவர்கள் பூமியை பார்க்காமலேயே கிரையம் செய்து கொண்டார்கள் என்றால் பார்த்து தான கிரையம் செய்து கொண்டார்கள். அந்த பத்திரத்தில் குறிப்பிட்டு எந்த தடம் என்று

குறிப்பிடப்படவில்லை என்றால் தடம் எழுதவில்லை. மேற்காக உள்ள தடம் தான் அந்த தடம் . தடத்தை பார்த்து மேற்காக உள்ள தடம் என்று பத்திரத்தில் எழுதி விட்டார்கள் . அந்த பத்திரத்தை நான் பார்க்கவில்லை. நான் வள்ளியம்மாளுக்கு 94 செண்ட் கிரையம் செய்து கொடுத்து விட்டு வழக்கிற்காக 80 செண்ட் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 80 செண்ட்டிற்கு தான் பணம் வாங்கி விட்டு 80 செண்ட் கொடுத்தேன். பத்திரத்தில் உள்ள சாட்சிகளை விசாரித்தால் உண்மை நிலவரம் தெரிய வரும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது . நான் 94 செண்டிற்கு பணத்தை சாட்சிகளின் முன்னிலையில் வாங்கி விட்டு தற்போது 80 செண்ட் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு பாத்தியப்பட்ட பூமிக்கு 498/2 சி, மற்றும் 536/1 ஏ 3 காலையின் வழியாக தான் தடம் உள்ளது என்றாலும் , நான் வாதிகள் அவர்களுடைய சொந்த பூமியில் அவர்களு க்காக விட்டு கொண்ட வண்டித்தடத்தை பொறுத்து உரிமை கேட்கிறேன் என்றால் , சரியல்ல. எல்லோராலும் சேர்ந்து விடப்பட்ட வண்டித்தடம் அது. எல்லோராலும் சேர்ந்து விடப்பட்ட வண்டித்தடம் என்று சொல்லும் நிலையில் யாராவது அந்த தடத்தை விடுவதாக எழுதி கொடுத்துள்ளார்களா என்றால் இல்லை. அது பொது வழித்தடத்தில் எங்கள் பூமி எதாவது போகிறதா என்றால் இல்லை . நாங்கள் எதாவது பூமியில் விட்டிருந்தால் தான் அது பொது வழித்தடம் என்று சொல்லலாம் என்றாலும் நாங்கள் ஏதும் பூமி விடாமல் வாதி தனது உபயோகத்திற்கு விட்டு சொந்த வண்டித்தடத்தை பொது வழித்தடம் என்று சொல்ல முடியாது என்றால் , சரியல்ல. எல்லோரும் சேர்ந்து 50 வருடங்களாக அந்த தடத்தில் தான் போய் க்கொண்டிருக்கிறோம். 1962 ம் வருடத்தில் 498/1 பி காலையில் ரங்கைய கவுடர் வாங்கும்போது அந்த பத்திரத்தில் வண்டித்தடம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது . 486/1 காலைக்கு செக்குபந்தி குறிப்பிடப்படும்போது ஊமத்தூரப்ப கவுடர் பூமிக்கு கிழக்கே என்று தான் குறிப்பிட்டுள்ளேன் . வண்டித்தடம் இருந்திருந்தால் என் செக்குபந்தியில் வண்டித்தடத்திற்கு கிழக்கே என்று தான் எழுதிகொடுத்திருப்பேன். வண்டித்தடம் இல்லாததால்தான் செக்குபந்தியில் வண்டித்தடம் பற்றி குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல . தடம் இருந்தது. தோட்டம் மட்டும் எழுதியிருக்கிறார்கள். 498/3 சுப்பையனுக்கு பாத்தியப்பட்ட பூமியினை 1957 ம்வருடம் கிரையம் வாங்கும்போது அதிலும்வண்டித்தடத்தை பற்றி குறிப்பிடப்படவில்லை என்றால் அது பற்றி தெரியாது. அவ்வாறு வண்டித்தடம்

விடப்பட்டிருநதால் மூல பத்திரத்தில் வண்டித்தடம் பற்றி எழுதியிருப்பார்கள் என்றாலும் வண்டித்தடம் இல்லாததால் தான் மூல பத்திரத்தில் அது பற்றி குறிப்பிடப்படவில்லை என்றாலும் சரியல்ல . வாதிகளின் சொந்த உபயோகத்திற்காக விட்டுக் கொண்ட பாதையில் உரிமை கேட்கிறோம் என்றால் சரியல்ல .486/1 காலையில் ஏற்கனவே விற்றது போக 2.01 ஏக்கரை தான் விற்க முடியும் நான் வேண்டும் என்றே 15 செண்ட் அதிகமாக எழுதி கொடுத்து விட்டு வாதிகள் மீது பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல .80 செண்ட் தான் கொடுத்தேன். நான் தண்டபாணிக்கு பவர் எழுதிக் கொடுக்கும்போது வாதிகளின் பத்திரத்தை பார்க்கவில்லை. நான் பவர் பத்திரத்தை படித்து பார்க்கவில்லை. அதில் என்ன எழுதி உள்ளது எப்படி எழுதப்பட்டது என்று எனக்கு தெரியாது . அது அவர்களாகவே எழுதி கொண்ட பத்திரம் என்றால் சரிதான் . அதாவது மாமூல் தடபாத்தியம் என்பது பத்திரத்தில் உள்ள தடத்தை தான்குறிக்கும் என்றாலும் புதிதாக விட்ட ஒரு தடத்தை பொறுத்து உரிமை கேட்க முடியாது என்றாலும் சரியல்ல ,. மாமூல் தட பாத்தியமானது என் அத்தைக்கு என் தகப்பனார் எழுதி கொடுத்த பத்திர்திலேயே 5 முழ அகலத்தில் வண்டித்தடம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் புதிதாக வண்டித்தடம் நாங்கள் கேட்க முடியாது என்றால் சரியல்ல . மேற்கே போகும் வண்டித்தடத்தை தான் நாங்கள் அனுபவித்து வருகிறோம் . மேற்கே வண்டித்தடம் போவதற்கு ஆவணங்கள் ஏதும் இல்லை என்றால் 50 வருடங்களாக சுற்றி இருப்பவர்கள் எல்லாம் அந்த வழியாக தான் போய் க்கொண்டிருக்கிறோம் . 486/1 காலையில் 2.1 ஏக்கரா தான் எழுதி கொடுக்க முடியும் என்றாலும், 486/1 காலையில் 2.15 என எழுதி கொடுத்துவிட்டு பிரச்சினை செய்கிறோம் என்றால் சரியல்ல . நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க என்னை யார் கூட்டி வந்தார்கள் என்றால் சம்மன் வந்தது , நான் பஸ்சில் வந்தேன் . நான் வரதராஜ் சொல்லி கொடுத்து, வரதராஜ் கூட்டி தான் வந்தேன் என்றால் சரியல்ல . நான் சொல்லி உள்ள பத்திரத்தில் உண்மை நிலவரம் உள்ளது என்றாலும் நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல . பத்திரத்தில் கையெழுத்து போட்ட என் மகன் மகளை விசாரித்தால் உண்மை நிலவரம் தெரியும் என்றால் தெரியும் . நான் பத்திரத்தில் ஒரு மாதிரி எழுதி கொடுத்து விட்டு சாட்சியம் அளிக்கும்போது ஒரு மாதிரி சாட்சியம் அளிப்பதால் நான் நம்பத்தகுந்த சாட்சியம் அல்ல என்றால் சரியல்ல. ஏமாற்றி எழுதி

**வாங்கி விட்டார்கள். நான் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையை தான் சொல்கிறேன்.**

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

**Sd/-S.Indulatha,**
சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.
**SUB COURT, METTUPALAYAM**